REGD. No. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 5] சென்னை : கார்த்திகை 28உ வெள்ளி (13—12—57) ★ ★ வெளியூர் : கார்த்திகை 29உ சனி (14—12—57) [இதழ் 156

இரயில்வே நிலையங்களில் கைத்தறி விற்பனை

புதுடில்லி, டிச. 11—

இரயில்வே நிலையங்களில் கைத்தறித் துணிகள், மற்றும் குடிசைத் தொழில் உற்பத்திச் சாமான்கள் இவற்றை விற்பனை செய்வதற்கு அனுமதியும், வசதியும் தர, இரயில்வே போர்டு சம்மதித்துள்ளதாகக் கூறப்படுகிறது.

நாடெங்கிலுமுள்ள இரயில்வே நிர்வாகத்தினர், தேவையான வசதிகளைத் தரக் கேட்கப்பட்டிருக்கிறார்களாம்!

டெல்லியின் மூர்க்கத்தனமான இந்தித் திணிப்பு

நேரு பண்டிதர் மீது கோர்ட் அவமதிப்பு குற்றம் சாட்டுகிறேன்

தமிழர்களை மூட்டை முடிச்சுடன் வெளியேற்றிவிட்டால் மிச்சம் இருப்பது என்ன?

இராயப்பேட்டையில் அண்ணா முழக்கம்

சென்னை-இராயப்பேட்டையில் 10-12-57-ல் நடந்த போதக் கூட்டத்தில் அண்ணா அவர்கள், தமிழர்களை மட்டரகமாக நேரு திட்டியது குறித்து கண்டித்துப் பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

"காட்டுமிராண்டி என்று நம்மைப் பார்த்து வசைமாரி பொழிவதால், நாம் காட்டுமிராண்டியாகிவிட மாட்டோம். 'காட்டுமிராண்டி' என்னும் வெறும் ஒலியைத்தான் நாம் கேட்கிறோம்; ஆனால், உண்மையிலேயே காட்டுமிராண்டித் தனத்தைக் காட்டுகிற —காட்டுமிராண்டிகளாகக் கருதப்படுகின்ற நாகர்களிடத்தில் நேரு பண்டிதர் தன் ஆணவத்தைக் காட்டவில்லை; புதிய அரசியல் திட்டத்தைப் பரிசாக அளித்திருக்கிறார்.

"நேரு பண்டிதர் தமிழ் நாட்டுக்கு வந்ததும், நம்மை இப்படிக் காரசாரமாகத் திட்டினாரே என்பதற்காக சிலர் ஆச்சரியப்படலாம்; உண்மையிலேயே நாம் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. அவர் அப்படி ஆணவத்தோடு பேசுவதற்கான சூழ்நிலை, அவர் இங்குவந்து இறங்கிய உடனேயே ஏற்பட்டிருக்கிறது. தூயவெள்ளை உடையுடுத்தி 500 குமரிகள் கும்மாளத்துடன் அவரை வரவேற்றிருக்கின்றனர்; ஒருபக்கம் புதிய பெண் மேயர் தாரா-செரியனும், இன்னொரு பக்கம் திருமதி ஜோதி வெங்கடாசலம் அம்மையாரும், மற்றும் அமைச்சர் லூர்து அம்மையாரும் இருந்து அவரை வரவேற்றிருக்கிறார்கள்; இந்த மூன்று அம்மையார்களுக்கும் காங்கிரஸ் கட்சியில் 'ஸ்தான பிராப்தி'கூட இருந்தது கிடையாது! ஏதோ, இவர்களைக் கண்டதும் நேருவுக்கு ஒருவித திருப்தி; அந்தத் திருப்தியின் விளைவாகத்தான்—இங்கு காங்கிரசுக்கு நல்ல செல்வாக்கு இருப்பதாக மனதிலே எண்ணிக்கொண்டுதான் — இப்படியெல்லாம் பேசியிருக்கிறார்!

"இதைப் பேச நம் மந்திரி கக்கன் போதுமே! இதற்கு நேருவா வரவேண்டும்? கக்கன் இப்பொழுது இதைத்தானே போகுமிடமெல்லாம் பேசிக்கொண்டு இருக்கிறார்? நேரு பேசிய எந்த வாக்கியத்தை கக்கன் பேசாமல் விட்டார்?

"யாரும் திட்டாததை நேரு திட்டிவிடவில்லை, பக்தவத்சலம், பெரியாரை 'பைத்தியம்' என்றார்; கக்கனும் அதைத்தானே பேசி வருகிறார்! 'கக்கன் பேசுகிற பேச்சைப் பேசுவதற்காக உலகம் போற்றும் நேரு பண்டிதரா வர வேண்டும்' என்று முதலில் நான் கூட நினைத்தேன்.

"அவருடைய பேச்சுக்களையெல்லாம் பத்திரிகையிலே படித்த பிறகு, 'நாம்தான் இந்த நேருவை ஒரு பெரிய மனிதராக நினைக்கிறோம்; உள்ளபடியே அவர் அந்த நாட்டுக் கக்கன்போலும் என்று உணர்ந்தேன்!

"'பைத்தியக்காரன்' என்று சொல்லுவது மிகச் சாதாரண வார்த்தைதான். அதற்காக நாம் வருந்தத் தேவையில்லை.

"இப்பொழுது இங்கு நீங்கள் இவ்வளவுபேர் கூடியிருக்கிறீர்கள்; நான் பேசிக்கொண்டிருக்கிறேன். இந்த ஒலிபெருக்கி மூலம் 4-வது தெருவில் உள்ளவர்களுக்கு இங்கு பேசும் சப்தம் கேட்கிறது; அங்குள்ள ஒருவர் மற்றொருவரைப் பார்த்து, 'என்ன அங்கு ஒரே இரைச்சல்?' என்று கேட்கிறார் என்று வைத்துக்கொள்வோம்; அதற்கு அவர் என்ன பதில் சொல்லுவார்? 'ஏதோ பைத்தியக்காரப் பயல்கள், கூட்டம்போட்டுப் பேசுகின்றான்களாம்' என்பார்; நாம் அவர்களைப்பற்றி இங்கே என்ன பேசிக்கொள்வோம்? 'அந்த ஆசாமிகள் சுத்த பைத்தியம்; ஆகையால்தான் கூட்டத்துக்கு வரவில்லை' என்போம்!

"கட்டிய மனைவியே புருஷனை, 'பைத்தியம்' என்கிறாள்; கணவன் மார்க்கெட்டுக்குப்போய் கத்தரிக்காய் வாங்கிவந்து மனைவியிடம் கொடுக்கிறான்; கத்தரிக்காயில் புழு இருக்கிறது என்று வைத்துக்கொள்வோம்; அதைப் பார்த்ததும் மனைவி, 'என்னங்க, போயும் போயும் இந்தப் புழுத்த கத்தரிக்காயை வாங்கி வந்திருக்கிறீர்களே?' என்று கேட்பாள்; உடனே கணவன், 'நீ கத்தரிக்காய்தானே கேட்டாய்; அதைத்தான் வாங்கிவந்தேன்' என்பான்; உடனே மனைவி என்ன சொல்வாள்? 'நீங்க ஒரு பைத்தியம்; உங்களைப்போய் வாங்கிவரச் சொன்னேனே, நானும்!' என்று கூறுவாள்.

"'பைத்தியம்' என்ற சொல்—சாதாரணமாகத் தமிழில் 'அசை' என்பார்களே, அதைப் போல—ஒரு பொருளற்ற வார்த்தையாகவே போய்விட்டது!

"நான் பொதுவாழ்வில் ஈடுபட்டு 10 ஆண்டுக்காலம்வரை, நான் பொதுத் தொண்டு செய்வதாகவே எங்கள் வீட்டார் கருதவில்லை; 'என்னமோ, பைத்தியம்; இந்த ஈரோட்டு நாயக்கர் பேச்சைக் கேட்டுக்கொண்டு ஊரைச் சுற்றுகிறான்' என்றுதான் என் பாட்டியார் சொல்லிக்கொண்டிருந்தார்.

"எனவே, 'பைத்தியம்' என்று நேரு திட்டியதில் ஒன்றும் பொருளே இல்லை; அதற்கு எந்தவித முக்கியத்துவமும் கொடுக்க வேண்டியதில்லை; திட்டுவது என்பது நேருவுக்கும் சர்வசாதாரணமான ஒன்றாகி விட்டது.

"நேரு பேசிய பேச்சை பத்திரிகை நிருபர்கள் வேறுவிதமாகவும் போட்டிருக்கலாம். 'ஜனநாயக நாட்டில் சாதி தேவையில்லை'—இப்படியும் தலைப்பிட்டு செய்தி வெளியிட்டிருக்கலாம் நேரு இதையும்தானே பேசினார்? என் இதற்கு முக்கியத்துவம் கொடுக்காமல், 'பெரியாரை நேரு பைத்தியம் என்றார்'—'மூட்டை முடிச்சுகளைக் கட்டிக்கொண்டு ஓடு' என்றார்—என்று, இப்படியெல்லாம் போடவேண்டும்? சிலபேருக்கு இப்படியெல்லாம் சொல்லவேண்டுமென்ற ஆசை! யாராவது இப்படிச் சொல்லும்போது, அதை எடுத்து இப்படித் தலைப்பு போட்டு செய்தி வெளியிட்டு விடுகிறார்கள். நேரு பேசிய தத்துவங்களை விட்டுவிட்டு, வசைமொழிகளை மட்டுமே தலைப்பு போடுவானேன்?

"இப்பொழுது இங்கு நடக்கும் இந்தக் கூட்டத்தைப்பற்றி நாளைக்கு பத்திரிகையிலே செய்தி போடவேண்டுமென்றால் அதற்கு தலைப்பு என்ன போடவேண்டும்? இங்கு நான் பேசிக்கொண்டிருக்கிறேன்; இதோ இந்த மேசை மீது இரண்டு சோடாபுட்டிகள் இருக்கின்றன. 'நேற்று இராயப்பேட்டை கூட்டத்தில் மேசைமீது இரண்டு சோடாபுட்டிகள் இருந்தன' என்று செய்திக்குத் தலைப்பு போட்டால் என்ன அர்த்தம்? நான் பேசியது முக்கியமல்ல; மேசைமீது சோடாபுட்டிகள்

(4-ம் பக்கம் பார்க்க)

ஆந்திர முதன் மந்திரியும் கடுமையாகக் கண்டிக்கிறார்

அரசியல் சட்டம் விதிக்கும் காலக் கெடு நீடிக்கப்பட வேண்டுமெனக் கோரிக்கை

ஐதராபாத், டிச. 12—

தேசிய மொழியாக இந்தி கட்டாயமாகத் திணிக்கப்படுவதை ஆந்திரப் பிரதேச முதன் மந்திரி சஞ்சீவ ரெட்டி வன்மையாகக் கண்டித்திருக்கிறார்.

இன்று பத்திரிகையாளரிடம் பேசிய அவர், இந்தித் திணிப்பு பற்றிக் கண்டித்துப் பேசுகையில், 'ஆங்கிலத்திற்குப் பதில் இந்தியைக் கொண்டு வருவதெற்கென அரசியல் சட்டத்தில் நிர்ணயிக்கப்பட்டுள்ள 1965-ம் ஆண்டு என்ற காலக்கெடு போதுமானதல்ல; இந்தியைக் கொண்டு வருவதற்கு இன்னும் காலம் கனியவில்லை" என்றும் கூறினார்.

மத்திய சர்க்கார், இந்தி பேசாத மக்களை — குறிப்பாக தென்னாட்டவரை இந்தி கற்றுக்கொள்ளுமாறு துரிதப்படுத்துவது—பலாத்காரப்படுத்துவது தனக்குப் பிடிக்கவில்லை என்றும் அவர் கண்டிப்பாகக் கூறியிருக்கிறார்.

ஆந்திரப் பிரதேசத்தைப் பொறுத்து, தாங்கள் இந்தியிடம் பகை பாராட்டவில்லை என்றும், அப்படி இருக்கையில் எதற்காக நாங்கள் நிர்ப்பந்தப்படுத்தப்பட வேண்டும் என்றும் அவர் கேட்டிருக்கிறார்.

ஆந்திர சர்க்கார், சீக்கிரமே ஆட்சிமொழிக் குழு அறிக்கைபற்றிய தனது கருத்தை அறிவிக்கும் என்றும் அவர் கூறினார்.

இந்தத் தலைமுறையாவது, இந்தியை அவசர அவசரமாகக் கற்றுக்கொள்ளுகிற சுமையை ஏற்காமலிருக்க வேண்டும் என்றும் அவர் கூறியதாகத் தெரிகிறது.

ஆட்சிமொழிக் குழு அறிக்கை பற்றிச் கருத்தறிவிக்கையில், ஆந்திர சர்க்கார் 1965-ம் ஆண்டிற்குப் பிறகும், ஒரு குறிப்பிட்ட காலம்வரைக்கேனும் ஆங்கிலமே ஆட்சிமொழியாக நீடிக்கவேண்டும் என்று தெரிவிப்பார்கள் என்று தெரியவருகிறது.

இலங்கை இந்தியர் பிரச்னை

தீர்வுகாணும் நெருக்கத்தில் நிலைமை இல்லையாம்

மாநிலங்கள் சபையில் பண்டிதர் விளக்கம்

புதுடில்லி, டிச. 12—

இலங்கையில் உள்ள இந்திய வம்சாவழியினர் பிரச்சினைக்கு நாம் இன்னும் தீர்வு காணவில்லை என்பதை பண்டிதர், மாநிலங்கள் சபையில் ஒப்புக்கொண்டிருக்கிறார்.

"என்றாலும், நான் நட்புறவு முறையில் இலங்கைப் பிரதமருடன் பேசினேன்; இருவரும் இருசாராரின் கருத்துக்களையும் பிரச்சினையைப் பொறுத்த கஷ்ட நஷ்டங்களையும் தெளிவாகப் புரிந்துகொண்டோம்; அத்துடன் நிறுத்திக்கொண்டோம்; பிரச்சினைக்குத் தீர்வு காண எண்ணவில்லை" என்றும் கூறியிருக்கிறார்.

பிரச்சினைகள் என்ன என்பதையும், இரண்டொன்றைத் கூறி அவர் விளக்கியிருக்கிறார்.

"ஒன்று—இலங்கையில் உள்ள இந்தியக் குடிமக்களைப் பொறுத்தது; இது ஒன்றும் பெரிய பிரச்சினையாக இல்லாவிட்டாலும், நாம் இதர அன்னிய நாட்டுக் குடிமக்களைப்போல அவர்கள் நடத்தப்பட வேண்டும் என்று விரும்புகிறோம்; திடிரென அவர்கள், ஏராளமான அளவில் வெளியேற்றப்படுவதை விரும்பவில்லை.

"இரண்டாவது பிரச்சினை—நெடு நாட்களாக இலங்கையில் வாழும் 'இந்தியர்'களைப் பொறுத்தது; இவர்களிலே பலர், இலங்கையிலேயே பிறந்தவர்கள்; ஆயிரக்கணக்கில் இருக்கின்றனர்; இலங்கைக் குடிமக்களாக விரும்புகின்றனர்; இவர்கள் இன்று, 'நாடற்றவர்கள்' என்ற நிலையில் வைக்கப்பட்டிருக்கிறார்கள்; சிலர் இந்தியக் குடிமக்களாகியுள்ளனர். வெகு சிலர் மட்டுமே இலங்கைக் குடிமக்களாக்கப்பட்டிருக்கின்றனர். ஆனால் இவர்கள் இலங்கைக் குடியுரிமை கோரி செய்திருந்த மனுக்கள் ஏராளமான அளவில் நிராகரிக்கப்பட்டுவிட்டன. எனவேதான் அவர்கள், ஒரு நிலையற்ற தன்மையில் இருக்க வேண்டியுள்ளனர்.

"இது, சந்தேகமில்லாமல் இலங்கை சர்க்காரையும் அந்த மக்களையும் மட்டுமே பொறுத்த பிரச்சினையாகும். இந்திய வழி வந்தோர் பிரச்சினையாயிற்றே என்ற உணர்ச்சியினால்தான் இந்திய சர்க்கார் கவலை கொள்கிறதே தவிர வேறெதனாலும் இல்லை."

இவ்வாறு, பண்டிதர் பிரச்சினைகளை விளக்கியுள்ளார்.

இரயில்வே ஊழியர்களுக்குப் பொழுதுபோக்கு வசதி

புதுடில்லி, டிச. 12—

இந்திய இரயில்வேக்களில் மொத்தம் 414 இடங்களில் இரயில்வே ஊழியர்களுக்குப் பொழுதுபோக்கு நிலையங்கள் உள்ளனவாம்!

சென்னை பஸ் போக்குவரத்து ஊழியர்களுக்கு விடுமுறை

சென்னை, டிச. 12—

சென்னை அரசாங்கம் நடத்தி வரும் பஸ் போக்குவரத்துத் துறையில் பணியாற்றும் ஊழியர்களுக்கு ஆண்டிற்கு 15 நாட்கள் பண்டிகை விடுமுறையாகத் தரப்படுகிறது.

நம் நாடு
தி.மு.க.தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 13—12—57 வெள்ளி

மற்ருெரு அவமதிப்பு!

“எனக்குத் தெரியாது என்பதுடன், குழப்பம் பற்றி அதிகம் சொல்லத் தயாராக இல்லவும் இல்லை. விவகாரம் நீதிமன்ற விசாரணையில் இருந்து வருகிறது. யார் குற்றவாளிகள், யார் குற்றமற்றவர்கள் என்பதை அவர்கள் (நீதிபதிகள்) தீர்மானிப்பர்.”

முதுகுளத்தூர் வெறிச்செயல் பற்றி பேசிய இந்தியப் பிரதமர் நேரு, நீதிமன்ற விசாரணையில் இருந்துவரும் அந்த விவகாரம் குறித்து இதற்கு மேலும் பேசக்கூடாது என்ற உணர்வுடன், மேற்குறிப்பிட்டுள்ள கருத்தை வெளியிட்டதுடன், அதுபற்றி மேலும் பேசாது இருந்துவிட்டார்.

இப்படி, அவர் வாயடைத்துக் கொண்டதன் மூலம், நீதிமன்ற விசாரணையில் இருந்து வரும் எந்த ஒரு வழக்கு குறித்தும் சாதகமாகவோ, பாதகமாகவோ ஒருவர் பேசுவது, குறிப்பிட்ட வழக்கின் முடிவைப் பாதிக்கக்கூடும் என்ற உண்மையை இந்தியப் பிரதமர் நன்கு தெரிந்திருக்கிருர் என்பது புலனுகிறது. அதுவுமன்றி, குறிப்பிட்ட வழக்கை விரிவாக விசாரித்து, குற்றந்தெளிந்து, அக்குற்றத்திற்குச் சட்டம் கோரும் தண்டனையைத் தருவதற்கான உரிமை பெற்றுள்ள நீதிபதியின் புனிதமான பணியில், அக்குற்றம்பற்றி கருத்தறிவிப்போர் குறுக்கிட்டதாகும் என்ற உண்மையையும் இந்தியப் பிரதமர் தெளிவாகத் தெரிந்திருக்கிருர் என்பதும், அவர் வாயுரை நமக்கெல்லாம் அறிவுறுத்துகிறது.

அதுபோன்றே, விசாரணையில் உள்ள வழக்குபற்றி ஒருவர் தம் கருத்தறிவிப்பது, நீதிமன்றத்தை அவமதிப்பதாகும் என்ற முறைமையை தாம் உணர்ந்திருக்கிருர் என்பதையும், இந்தியப் பிரதமரின் ஆணித்தரமான பேச்சு எடுத்துக்காட்டுகிறது.

அதுவுமன்றி, குறிப்பிட்ட வழக்கை விசாரித்து, குற்றஞ் சாட்டப்பட்டவர்கள் சட்டப்படி குற்றவாளிகளா இல்லையா எனத் தீர்மானிக்கின்ற பொறுப்பும், குற்றவாளிகள் எனக் கண்டால் அக்குற்றத்துக்குரிய தண்டனையை சட்டத்தில் கண்டுள்ளபடி குற்றவாளிக்கு அளிக்கின்ற கடமையும் நீதிபதிகளுக்கு உரியதே அல்லாது, தம்போன்ற ஆட்சித் தலைவர்களுக் குரியதல்ல என்ற பேருண்மையையும் தாம் தெரிந்தே இருக்கிருர் என்பதும், அவர் கூறிய கூற்றிலிருந்து வெளியாகிறது.

நீதிமன்றத்தை அவமதிப்பது என்ருல் என்ன என்பது குறித்து, ஐயத்திற்குத் துளியும் இடமின்றித் திட்டவட்டமாகத் தெரிந்துகொண்டிருக்கின்ற அதே இந்தியப் பிரதமர்தான், பெரியார் வழக்கு குறித்து—அவ்வழக்கு நீதிமன்ற விசாரணைக் கட்டத்தில் இருக்கிறது என்பதைத் தெரிந்திருந்தும் கூட—அவ்வழக்கின் முடிவைப் பாதிக்கின்ற வகையில், ஆத்திரத்தோடு பேசி இருக்கிருர்; அப்படிப் பேசினதின் மூலம் நீதிமன்றத்தை அவமதிக்கும் குற்றத்தை, குற்றம் புரிகிருேம் என்பதைத் தெரிந்துங்கூட, வேண்டும் என்றே இந்தியப் பிரதமர் செய்திருக்கிருர்.

பெரியார்மீது தொடரப்பட்டுள்ள வழக்கை விசாரிக்கும் நீதிபதிக்கு, அவ்வழக்கை எப்படி நோக்கவேண்டும், எப்படி ஆராயவேண்டும், எப்படி முடிவு கட்டவேண்டும், எப்படித் தண்டிக்கவேண்டும், என்ற துறை பற்றிஎல்லாம் இந்தியப் பிரதமர் அறிவுரை கூறியுள்ளார். அந்த அறிவுரையையும், தாம் இந்தியப் பிரதமர் என்ற எண்ணத்துடன் எச்சரிக்கை உருவில் அவர் அளித்துள்ளார்.

பண்டித நேரு இந்தியப் பிரதமராக இருந்தாலும், நீதிமன்ற விசாரணை உருவததில் இருந்து வரும் வழக்கு பற்றி கருத்தறிவிப்பதின்மூலம், நீதிமன்றத்தை அவமதித்து நடந்துகொள்ள—அதுவும் வேண்டுமென்றே அவர் நிலையில் உள்ளவர்கள் நடந்துகொள்ள, உரிமை துளியும் கிடையாது என்பதை நேற்று எழுதி இருந்தோம். இன்று, அரசியல் சட்ட பாதுகாப்பாளராக நடித்துக்கொள்ளும் அதே கனவான், நீதிமன்றத்தை அவமதித்து நடந்து கொண்டுள்ள மற்ருெரு சம்பவத்தைக் குறிப்பிடுகிருேம்.

பெரியார் அவர்கள் அரசியல் சட்டத்தைக் கொளுத்தப் போவதாக அறிவித்து, அதற்கு ஒரு நாளும் குறிப்பிடடார். அச்செயலைத் தடுப்பது என்ற போர்வையில், சென்னை அரசாங்கம் அவசரம் அவசரமாக ஒரு சட்டத்தை நிறைவேற்றிவைத்தது.

அநதச் சட்டம், சட்டம் என்ற நிலையைப் பெற்றுவிட்டதா இல்லையா என்பது இன்னும் ஐயத்திற்குரியதாக இருந்து வருகிறது. அது பற்றி இங்கு நாம் ஆராயபபோவதில்லை. அவ்வாராய்ச்சி இப்பொழுது தேவையற்றதும் ஆகும்.

பெரியார் அவர்கள் குறிப்பிட்ட நாளில் அரசியல் சட்டம் பற்பல இடங்களில் கொளுத்தப்பட்டுள்ளன. அப்படிக் கொளுத்தினவர்கள்மீது, அப்புதிய சட்டத்தினபடி வழக்குத தொடரப்பட்டு, குற்றவாளிகளாகத் தீர்மானிககபபட்டவர்களை, நீதிமனறங்கள தண்டித்தும் வருகின்றன.

அப்புதிய சட்டத்தின்கிழ், பலர்மீது தொடரப்பட்டுளள வழக்குகள் பல, இன்றளவும நீதிமன்ற விசாரணையில் இருந்துவருகின்றன.

இந்தியப் பிரதமர், அரசியல் சட்டத்தைக் கொளுததுவது பற்றியும், அப்படிக் கொளுத்துகிறவர்கள் பற்றியும், அவர்கள் பெற வேண்டிய தண்டனை பற்றியும், தமது கருத்தை அறிவித்த இக்கிழமை துவக்கத்திலும்அரசியல்சட்டத்தைக்கொளுத்தியதாகத் தொடரப்பட்ட பலவழக்குகள்நீதிமன்றங்களில் விசாரணை பருவததிலேயே இருந்திருக்கின்றன. இந்தியப் பிரதமரின பேச்சு, மேற்படி வழககுகளை விசாரித்துவரும் நீதிபதிகளின் முடிவை மாற்றக்கூடியதாகும என்பதில் ஐயமில்லை. எனவே, இவ்வினததலும், இந்தியப் பிரதமர், நீதிமன்றத்தை அவமதிககும் பெரும பிழையை—அவா நிலையில இருககினறவர்கள இழைககக் கூடாத பெரும பிழையை, வேண்டுமெனறே மனமறிந்து செய்திருக்கிறா என நாம அவர்மீது குறறஞ் சாட்டுகிறோம.

பண்டித நேரு, பேரரசின் பிரதமர்தான்; இருந்தால் என்ன?

சட்டத்திற்கு மதிப்பளித்து நடக்க வேண்டிய முதல் குடிமகன் அவாதான என்பதை ஏனோ அவா மறந்து, செயலபடத் துணிந்துவிட்டார்!

தம வாழ்நாளில் பெரும் பகுதியை சட்டததை மீறுவதிலேயே கழிததுவந்திருக்கும் அவர், புதிதாக சட்டததை மதித்து நடந்துகொள்ளும் பழககத்தைப் பெறுவர் என்பது நடைபெற முடியாததுதான்! ‘பழக்கம் கொடிது! பாறையையும் கோழி சீய்க்கும்!!’

தென்னகத்திற்கு வஞ்சகம் புரியும் டெல்லியின் ஏகாதிபத்தியப்போக்கு!

கேரள கல்வி மந்திரி முண்டசேரி உணருகிருர்

நியாயம் பெற தென்னுட்டு மாநிலங்கள் ஒன்று சேரவேண்டுமெனக் கேட்கிருர்!

மதுரை, டிச. 12—

“ஐக்கிய மாகாணத்திற்கு அதிகப்படியான நிதி வசதி செய்து கொடுக்கும் இந்திய அரசு, மாகாண அரசுக்குப் போதிய நிதி வசதி செய்துகொடுக்க மறுக்கிறது. இதுபோனற செயல்கள் நீடித்துக் கொண்டே போனுல் அதைத் தடுக்க தமிழ் நாடு, ஆந்திரம், கேரளம் ஆகிய மூன்று நாடுகளும் ஒன்றுபட்டு, மத்திய அரசிடம் கண்டிப்பாக நடந்துகொள்ளவேண்டும்”

—என்று, கடந்த 8-ந் தேதியன்று இங்கு நடைபெற்ற பொதுக் கூட்டமொன்றில், கேரளக் கல்வி அமைச்சர் ஜோசப் முண்டசேரி கேட்டுக்கொண்டார்.

அவர் மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

“மீன் பிடித் தொழில் மூலம், இந்தியாவிற்குக் கிடைக்கும் வருமானத்தில் 25 சதவிகிதம் கேரளத்திலிருந்து கிடைக்கும் வருமானமாகும். ஆனுல், மீன் பிடிக்கும் தொழிலை வளர்ப்பதற்கு இந்திய அரசு போதிய நிதி உதவியளிக்கவில்லை. கடற்கரையே இல்லாத ஐக்கிய மாகாணத்திற்கு அதிக நிதி உதவி அளிக்கிருர்கள்.”

—‘தமிழ் நாடு’: 11-12-57

ஆந்திர மாநிலத்திற்கு மேல்சபை

90 உறுப்பினர்களுடன் அடுத்த ஆண்டு நிறுவப்படும்

ஐதராபாத், டிச. 11—

வரும் ஆண்டு ஏப்ரல் திங்கள் இறுதியில் ஆந்திர மாநிலத்திற்கென உத்தேசிக்கப்பட்டுள்ள 90 பேர்கொண்ட மேல்சபை நிறுவப் பட்டுவிடும் என்று தெரியவருகிறது.

இதற்கான குடியரசுத் தலைவரின் உத்தரவைத் துரிதப்படுத்துமாறு மத்திய சர்க்காரை, மாநில சர்க்கார் கேட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

டெல்லியின் ஏற்பாட்டிற்கு மாநிலங்கள் எதிர்ப்பு

புதுடில்லி, டிச. 11—

யூனியன் சுகாதார சர்வீஸ் ஒன்றினை நிறுவுவதுபற்றி டெல்லி சர்க்கார் முடிவு செய்துவிட்டதாகவும், இந்த ஏற்பாட்டில் பங்குகொள்ள பல்வேறு மாநிலங்களும மறுத்துவிட்டதாகவும மத்திய சுகாதார மந்திரி டி. பி. கார்மார்கர் மக்கள் சபையில் தெரிவித்திருக்கிருர்.

இந்த சர்வீசில், இப்போது டெல்லி சர்க்காரில் உள்ள அதிகாரிகள் இடம் பெறுவர் என்றும், அதிகாரிகளைத் தேர்ந்தெடுப்பதற்கென்று மததிய பப்ளிக் சர்வீஸ் கமிஷன் உறுப்பினர் ஒருவர் தலைமையில் குழு ஒன்று நிறுவப்படும என்றும், குழு தேர்ந்தெடுக்கும அதிகாரிகளின பட்டியலை இறுதியாக பப்ளிக் சர்வீஸ் கமிஷன அங்கீகரிக்கும் என்றும் மந்திரி கூறினர்.

தரப்படும் உதவி எவ்வளவோ?

புதுடில்லி, டிச. 12—

பல இரயில்வேக்களில், மொத்தம் 120 இடங்களில் அரசாங்கப் பதிவில்லாத ஊழியர்களுக்கு, மோசமான பருவநிலை ‘அலவன்ஸ்’ கொடுக்கப்பட்டுவருகிறதாம்.

இதில் வடகிழக்கு இரயில்வேக்களில் 54 இடங்களிலும், தென் இரயில்வேயில் 48 இடங்களிலும் தரப்படுவதாக மத்திய அமைச்சர் ஷா நவாஸ்கான் மக்கள்சபையில் தெரிவித்துள்ளார்.

இன்னும 17 இடங்களில் இந்தப் ‘படி’யை அளிக்கும் பிரச்சினை ஆலோசிக்கப்பட்டு வருகிறதாம்!

உண்மையாகவா?

சென்னை டிச. 12—

மேட்டூர், கீழ்பவானி அணைகளில் தேவையான அளவிற்கு மேல் தண்ணீர் இருக்கிறதாம்!

இந்தத் தண்ணீரைக்கொண்டு தஞ்சை மாவட்டத்தில், 50,000 ஏககர் நிலமும், சிதம்பரம் தாலுகாவில் 1 இலட்சம் ஏக்கர் நிலமும் சாகுபடி செய்யப்படுமாம்.

25 000 டன் நெல் பயிரும், 50,000 டன் தானியமும் அதிகமாகக் கிடைக்கும் என்று மதிப்பிட்டுள்ளனர்.

இந்தியைக் கட்டாய பாடமாக்கும் மூன்று மொழிக் கல்வித் திட்டம்

டெல்லியின் சிபாரிசுக்கு இன்னும் எட்டு மாநிலங்கள் பதிலிறுக்கவில்லை

புதுடில்லி, டிச. 11—

உயர்நிலைப் பள்ளிகளில் மூன்று மொழிக் கல்விபற்றிய திட்டத்தினை இன்னும் பல மாநிலங்கள் பரிசீலித்துக்கொண்டிருப்பதாகவும், நான்கு மாநிலங்கள் மட்டுமே இந்த ஏற்பாட்டினை ஏற்றுக்கொண்டிருக்கின்றன என்றும், கூறப்படுகிறது.

திட்டத்தினை ஏற்றுக்கொண்டுள்ள நான்கு மாநிலங்களில் ஆந்திரப் பிரதேசமும், ஜம்மு-காஷ்மீரும், திட்டத்தில் சில மாறுதல்களைச் செய்திருக்கின்றனவாம்.

இன்னும் இந்த மூன்று மொழிக் கல்வி—அதாவது, இந்தியைக் கட்டாய பாடமாக்கும் திட்டம்பற்றி சென்னை, மைசூர், பம்பாய், பஞ்சாப், பீகார், உ. பி., இராஜஸ்தான் மாநிலங்கள் முடிவு கூறவில்லையாம்!

இந்தத் தகவல்களை மாநிலங்கள் சபையில் கல்வி இலாகா மந்திரி டாக்டர் ஸ்ரீமாலி தெரிவித்திருக்கிருர்.

குறைந்த வருமானமுடையோர்க்கு

வீட்டு வசதி

மாநில சர்க்கார்களுக்கு டெல்லி தந்த கடன்

புதுடில்லி, டிச. 11—

குறைந்த வருமானமுடையோருக்கு வீடு கட்டித்தரும் திட்டத்திற்காக மாநில சர்க்கார்களுக்கு கடந்த அக்டோபர் திங்களில் டெல்லி சர்க்கார் ரூ. 7 89 இலட்சுவரை கடனுக வழங்கியிருக்கிறதாம்!

இதில் சென்னைக்கு ரூ. 33 இலட்சம் மட்டுமே கிடைத்ததாம!

உங்களுக்குத் தெரியுமா?

ரூபாய் நோட்டுகள் அச்சடிக்க ஆணடொன்றுக்கு 1450 டன் காகிதம் தேவைப்படுகிறதாம்!

இபபோது நோட்டுகள் அச்சடிக்க வாங்கும் காகிதத்தின் விலை பவுண்டு ஒன்றுக்கு ரூ. 4-ம 59 புதிய காசும் ஆகிறதாம!

அஞ்சல்தலை முதலியவைகள் அசசடிக்க ஆணடொன்றுக்கு 5 ஆயிரம் டன் காகிதம் தேவைப் படுகிறதென்று மக்கள் சபையில் தெரிவிககப்பட்டிருக்கிறது.

துணி இயந்திரங்கள் உற்பத்தி அதிகரிப்பு

மாநிலங்கள் சபையில் தகவல்

புதுடில்லி, டிச. 11—

இந்தியாவில் துணி இயந்திரங்களின் உற்பத்தி கடந்த ஐந்தாண்டுக் காலமாக சுமார் 600 சதவிகிதம் அதிகரித்திருக்கிறதாம்! நடப்பு ஆண்டில் அதன் உற்பத்தியின் மதிப்பு சுமார் ரூ. 9 கோடி என்றும், ஐந்தாண்டுகளுக்கு முன்னுல் அது 1,20,00,000 ஆக இருந்தது என்றும் மாநிலங்கள் சபையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்தத் தொழிலுக்குத் தேவையான தேனிரும்பு, உருக்கு போன்ற மூலப் பொருள்களைத் தகுந்த அளவில் ஒதுக்குவதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப் பட்டிருக்கின்றனவென்றும், இந்நாட்டில் கிடைக்காத மூலப் பொருள்களை வெளிநாடுகளுலிருந்து தேவைப்படும் அளவுக்கு இறக்குமதி செய்ய அனுமதிக்கப் பட்டிருக்கிறதென்றும, 1954-55-ல் உற்பத்தியின் மதிப்பு ரூ. 3·12 கோடியென்றும் 1955-56-ல் இதன் மதிப்பு 5·43 கோடியாக அதிகரித்ததென்றும் மந்திரி தெரிவித்தார்.

துண்டாடுவதைத் தடுக்க சர்க்கார் மசோதா

கொழும்பு, டிச. 12—

பெரிய தேயிலை, இரப்பர் தோட்டங்களைத் துண்டாடுவதைத் தடுப்பதற்கான சட்டத்தை இலங்கை அரசாங்கம் கொண்டு வந்துள்ளது.

தோட்டத்தின் ஒரு பகுதியை விற்கவோ, அடமானம் வைக்கவோ, நன்கொடையாகத் தரவோ, சொத்தாகப் பிரித்துத் தரவோ இந்தச் சட்டம் இடம் தரவில்லை.

ர்நாடகப் பகுதியில் தி. மு. கழகப் பொதுக்கூட்டங்கள்

ன். எஸ். இளங்கோ கலந்துகொண்டார்

2—12—57 மாலை 5-30 மணி ளவில் கர்நாடக மாநில சித்தல ர்க்கம் மாவட்டம் இரியூர் தி.மு. ழகச் சார்பில், ஒரு மாபெரும் பாதுக்கூட்டம் கழகப் பணி ன முன் நடைபெற்றது.

கன்னடியர் பகுதியில் ஏற்பாடு ச,ய்ய ப்பட்டிருந்த இந்தப் பாதுக்கூட்டத்திற்கு தோழர் க. பி. முகம்மது அனீபா லைமை தாங்கினர். 'சம்யுக்த ர்நாடகம்' என்னும் கன்னடிய மாழி இதழின் முன்னாள் ஆசிரி ர் திரு. குமார வெங்கண்ணு வர்கள், கன்னடிய மொழியில் ழகத்தின் இலட்சியங்களையும், த தமிழகத்தில் ஆற்றிவரும் ணியினையும் எடுத்துரைத்து, ன்னடியர்கள் கழகத்தில் உறுப் னர்களாகி திராவிட நாடு பிரச் னைக்கு ஆதரவு தரவேண்டும் ன்று கேட்டுக்கொண்டார்.

அடுத்து பெங்களூர் மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் தோழர் எஸ். வி. பதி அவர்கள், கழகம் கர்நாடகத்தில் ஆற்றிவரும் பணிகள் குறித்தும், கழகத்திற்குக் கிடைத்துவரும் ஆதரவு குறித் தும் சிறிது நேரம் விளக்கவுரை ஆற்றினர்.

அடுத்து தஞ்சை மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் தோழர் என். எஸ். இளங்கோ அவர்கள் திராவிட நாட்டுப் பிரி வினையை வலியுறுத்தியும், இந்தி எதிர்ப்பில் தமிழக மக்களோடு கர்நாடக மக்களும் ஒன்றாக இணைந்து போராடவேண்டு மெனவும் கேட்டுக்கொண்டார். கர்நாடக முதலமைச்சர் திரு. நிஜலிங்கப்பா அவர்களும் இந்தி ஆட்சிமொழி ஆதல் தகாது எனக் கூறியதைச் சுட்டிக்காட்டினர். திராவிட நாடு பிரிவினை சித்தாந் தம் தமிழ் நாட்டு அறிஞர்களால் உருவாக்கப்பட்டது என்பதற்காக அதை கர்நாடக மக்கள் அலட்சி யப்படுத்திவிடக்கூடாது என்றும், நன்கு ஆராய்ந்து பார்த்தால் நாட்டுப் பிரிவினை கர்நாடக மக் களுக்குச் சிறந்த வாழ்வளிக்கும் எனபதைக் கண்கூடாகக் காண முடியும் என்றும் தெளிவுபடுத் தினர்.

கூட்டத்துவக்கத்தில் தோழர் இளங்கோ அவர்களுக்கு வாழைக் காய் வியாபாரிகள், விவசாயத் தோழர்கள், கழகத் தோழர்கள் முதலியோர்களால் மலர்மாலை களும், கைத்தறித் துணிகளும் அணிவிக்கப்பட்டன. மேடை, மின்விளக்குகளாலும், கழகக் கொடிகளாலும் மிக அழகாக அமைக்கப்பட்டிருந்தது.

கூட்டம் துவங்குவதற்கு முன் ஞல், என். எஸ். கே. படிப்பகம், அதில் அமைந்திருக்கும் தமிழ்ப் பள்ளிக்கூடம் முதலியவற்றை தோழர் இளங்கோ பார்வையிட் டார்; தமிழ் மாணவ—மாணவி கள் வரவேற்று, மலர்மாலைகள் அணிவித்தனர். ஹிரியூர் எனப் படும் இந்த ஊர் பெங்களூரி லிருந்து நூறு மைல்களுக்கு அப் பால் கர்நாடகத்தின் மையத்தில் அமைந்திருப்பதும், அங்கு கழகக் கிளை ஒன்று துவக்கப்பட்டிருப்ப தும் குறிப்பிடத்தக்கது.

பெங்களூர்-சிவன்செட்டி வட்ட தி. மு. க. பொதுக் கூட்டம்

பெங்களூரில் தடையுத்தரவு போடப்பட்டு, நமது பொதுக் கூட்டங்களுக்கும் அனுமதி கிடைக்காத காரணத்தால், சனி ஞாயிறுகளில் நடைபெற இருந்த பொதுக்கூட்டம் ரத்து செய்யப் பட்டது; ஆனல், 1—12—57 காலை 10 மணியளவில் சிவன் செட்டி தெரு முகம்மது. அலி மண்டபத்தில் ஒரு ஊழியர் கூட்ட மும், சிறப்புச் சொற்பொழிவும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. கூட்டத்திற்கு மாவட்டச் செய லாளர் தோழர் எஸ். வி. பதி அவர்கள் தலைமை தாங்கினர். தோழர் என். எஸ். இளங்கோ அவர்கள் சிறப்புரை ஆற்றுகையில், கன்னடிய நாகரிகம் திராவிட நாகரிகத்தின் ஒரு சிறப்பான பகுதி என்றும், திராவிடநாட்டு வரலாற் றுக்கு வைதரும், இப்புவும் தங்கள் வீரம்செறிந்த போராட்டமுறை யால் பணியாற்றி இருக்கிறார்கள் என்றும் குறிப்பிட்டார். தோழர் இ. சோழன் நன்றிகூற கூட்டம் 12 மணியளவில் இனிது முடிந் தது,

மாலையில் பெங்களூரில் பல பகுதிகளில் பணியாற்றிக்கொண் டிருக்கும் கழகக் கிளைகளையும், படிப்பகங்களையும் பார்வையிட்டு, ஆங்காங்கு கழக நண்பர்களுடன் கழகப் பணிகுறித்து விவாதித் தார்கள்.

கோலார்—தங்கவயல் ஆண்டர்சன்பேட்டை:

3—12—57 மாலை 6 மணியள வில் ஆண்டர்சன்பேட்டை தி.மு. க. திடலில் தோழர் கே. எஸ் கோபாலகிருஷ்ணன் தலைமையில் ஒரு மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் மணி மேகலன், இ. சோழன் முதலி யோர் பேசியபின், தோழர் என். எஸ். இளங்கோ அவர்கள் கழகத்தின் பணிகுறித்து நீண்ட நேர உரை நிகழ்த்தினர். செய லாளர் நன்றிகூற கூட்டம் இனிது முடிந்தது.

சேலம்-குகை கைத்தறித் துணி

உற்பத்தியாளர் கூட்டம்

சேலம், டிச. 9—

சேலம்-குகை கைத்தறித்துணி உற்பத்தியாளர் சங்க ஆண்டு பேர வைக் கூட்டம் 8—12—57-ல், திரு. கே. ரகுநாத செட்டியார் தலைமையில் நடைபெற்றபோது, கைத்தறித்துணிக்கு விற்பனைவரி விலக்கு இருப்பதை நிரந்தரமாக்க வேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொண்டும், தங்கள் தேவைக்குக் கைத்தறித் துணி களையே வாங்கி உபயோகிக்கு மாறு பொதுமக்களைக் கேட்டுக் கொண்டும், அகில இந்திய கைத் தறி போர்டும், சென்னை மாநில கைத்தறி போர்டும் கூட்டுறவு நெசவாளர் சங்கங்களுக்கு மட்டும் பணி புரிந்துவருவதால் அவை களைக் கலைத்துவிட்டு, நெசவாளர் கள்—உற்பத்தியாளர்கள்—வியா பாரிகள்—ஏற்றுமதியாளர்கள்— கூட்டுறவு சங்கங்கள் ஆகியவர் களின் பிரதிநிதிகள் கொண்ட குழுக்களாக அமைக்குமாறு மாநில—மத்திய அரசாங்கங்களைக் கேட்டுக்கொண்டும் தீர்மானங்கள் நிறைவேறின.

நெசவாளர் கூட்டுறவு சங்கங் களுக்கு மட்டும் துணி விற்பனை களுக்கு 'ரிபேட்' (கழிவுச் சலுகை) அளித்துவருவது நியாய மற்றது—பாரபட்சமானது எனத் தெரிவிக்கப்பட்டது.

கைத்தறிகள் நூல் வாங்கி உப யோகிக்க 'செஸ்' நிதியிலிருந்து நிதி உதவி அளிக்குமாறு அரசாங் கத்தைக் கேட்டுக்கொண்டு மற் ெருரு தீர்மானம் நிறைவேறி யது. (ந. கி.)

பிரிட்டிஷ் பிரதமர்

ஜனவரியில் இந்தியா வருகிருர்

பிரிட்டிஷ் பிரதமர் மாக் மில்லன், வரும் சனவரி 8-ந் தேதி இந்தியா வருவார். அவர் 5 நாட் களுக்கு—12-ந் தேதி முடிய இந்தியாவில் தங்குவார் எனத் தெரியவருகிறது.

பண்டித நேருவுடன் அவர், காமன்வெல்த், சர்வதேசப் பிரச் சினைகள் பற்றிப் பேசுவார் என்று தெரிகிறது.

பிரிட்டிஷ் பிரதமர், தனது காமன்வெல்த் நாடுகளின் சுற்றுப் பயணத் திட்டப்படி இங்கு வந்து விட்டுத் தாயகம் திரும்புமுன்னர், பாகிஸ்தான், இலங்கை, ஆஸ்தி ரேலியா, நியூசிலாந்து ஆகிய நாடு களுக்கும் செல்வார் எனத் தெரி கிறது.

'விகிங்' விமானங்களை விற்றுவிட முடிவு!

புதுடில்லி, டிச. 11—

இந்திய விமானப் போக்கு - வரத்து கார்ப்பொரேஷன், தன் னிடமுள்ள 'விகிங்' விமானங் களை, முடிந்தபோது விற்றுவிட முடிவு செய்துவிட்டதாகவும், 'விகிங்' விமானங்களை விட 'டகோடா' விமானங்கள் நன்றாயிருக்கிறது என்றும், இப் போது 'விஸ்கவுண்ட்' விமானங் கள் வந்துவிட்டமையாலும், விகிங் விமானங்கள் மிகப் பழையனவாகி விட்டமையாலுமே 'விகிங்' விமா னங்களை விற்றுவிடுவதெ ன முடிவு செய்யப்பட்டதாகவும், மந்திரி லால்பகதூர் சாஸ்திரி, மக்கள்சபையில் கூறியிருக்கிருர்.

திட்டச் செலவிற்கு ஒப்ப வருமானம் இல்லையாம்!

மாநிலங்களில்பற்ருக்குறை மிகுதியாயுள்ளதாம்

மக்கள் சபையில் மந்திரி தரும் விளக்கம்

புதுடில்லி, டிச. 10—

"ரெவினியூ கணக்கில் திட்டச் செலவின் மட்டத்திற்கு மாநில— மத்திய சர்க்கார்களின் வருமா னம் இருக்கவில்லை"

என்று, உதவி திட்ட மந்திரி மிஸ்ரா மக்கள்சபையில் தெரிவித் திருக்கிருர்.

பற்ருக்குறை, மாநிலங்களி லேயே ஏற்பட்டிருப்பதாகவும் அவர் கூறினர்.

மத்தியசர்க்காரைப் பொறுத்து 1956—57-ம் ஆண்டில் திருத்தப் பட்ட செலவு மதிப்பீட்டின்படி, ரூ. 38 கோடி ரெவினியூ கணக் கில் உபரி காட்டப்பட்டிருக்கி றது; இது, புதிய வரி விதிப்பு கள் மூலம் கிடைத்த ரூ. 55 கோடியையும்சேர்த்துக்கொண்ட பின் தரப்படும் கணக்காகும்.

மாநிலங்களின் 'பட்ஜெட்' மதிப்பீட்டின்படி பார்த்தால், ரெவினியூ கணக்கில் பற்ருக்குறை ரூ. 77 கோடியாக இருக்கிறது; இது, புதிய வரி விதிப்புகள் மூலம் கிடைத்த ரூ. 6 கோடிக்குப் பிறகு உள்ள கணக்கு; எஞ்சியுள்ள வரு டத்தில் மேலும் புதிய வரிகள் மூலம் ரூ. 5 கோடி கிடைக்கும்.

1957—58-ல், பட்ஜெட் மதிப் பீடுகளின்படி மத்திய சர்க்கா ருக்கு ரூ. 45 கோடி உபரி கிடைக் கும்; இது, புதிய வரி விதிப்பு மூலம் கிடைக்கும் ரூ. 78 கோடிக் கும் பிறகு வரும் கணக்காகும்.

மாநிலங்களில் இந்த ஆண்டில் பட்ஜெட் மதிப்பீடுகளின்படி ரூ. 91 கோடி பற்ருக்குறை ஏற்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதில் ரூ. 16 கோடி மட்டுமே புதிய வரி விதிப்புகள் மூலம் சரிக் கட்டப்படலாம் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

இந்த விவரங்களை எல்லாம் அந்த உதவி மந்திரி தெரிவித்தி ருக்கிருர்.

அளவுக்கு அதிகமாக வரி விதிப்பு

மக்களின் தாங்கும் சக்தியை அறியும் ஆற்றல் டெல்லிக்கு இல்லை

மைசூர் முன்னுள் முதலமைச்சர் கண்டனம்

உதகை, டிச. 11—

உதகை நகர காங்கிரஸ் அர சியல் மாநாட்டிற்குத் தலைமை வகித்துப் பேசுகையில், மைசூர் மாநில முன்னுள் முதலமைச்சர் அனுமந்தையா அவர்கள், மத்திய அரசாங்கத்தின் வரி விதிப்பு பொருளாதார கொள்கையை வன்மையாகக் கண்டித்தார்.

இந்தியா சுதந்தரம் பெற்ற பிறகு பொதுமக்கள் எந்த அள வுக்கு வரி விதிப்பைத் தாங்கும் சக்தியைப் பெற்றுள்ளனர் என் பதையும், அளவுக்கு அதிகமாக வரி விதிப்பதின் காரணமாக நாட்டின் பொருளாதாரம் எந்த அளவுக்கு பாதிக்கப்படுகிறது என் பதையும் அறிந்துகொள்ளும் ஆற் றல் மத்திய அரசாங்கத்திற்கு இல்லை என்று அவர், அந்தக் காங்கிரஸ் மாநாட்டில் தெரிவித் துள்ளார்.

அவர் மேலும் தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டதாவது:-

"மத்திய அரசாங்கத்தைக் கவர்ந்துகொண்டிருக்கும் இரண் டாவது ஐந்தாண்டுத் திட்டத் திற்கு நிதி வசதியைப் பெருக்கு வதற்காக விளைவுகளைப் பற்றி எண்ணிப்பார்க்காமல் இயன்ற முறைகள் அனைத்தையும் மத்திய அரசாங்கம் பின்பற்றி வந்துள் ளது.

"இப்போது அரசாங்கம் சிக் கன நடவடிக்கையில் ஈடுபட்டுள் ளது என்று கருதப்படுகிறது; ஆனல் நடைமுறையில் இதற்கு நேர்மாருன நிலைமையே இருக் கிறது.

"மத்திய அரசாங்கமும் மாநில அரசாங்கமும் பல துறைகளில் நிர் வாகத்தின் பெயரால் பணத்தை வீணுக்கிவருகின்றன.

"மத்திய அரசாங்கத்திற்கு ஆண்டுதோறும் கிடைக்கும் ரூ. 1,200 கோடி வருமானத்தில், நிர்வாகச் செலவுகளுக்காக ரூ. 800 கோடி அளவுக்கு செல விடப்பட்டுவருகிறது.

உணவுப் பிரச்சினையை மத்திய அரசாங்கம் தீவிரமாக ஆராய்ந்து, நன்கு உருவாக்கப்பட்ட நடை முறைக் கொள்கைகளைப் பின் பற்றுததுதான் இன்று ஏற்பட் டுள்ள ஏமாற்றத்திற்கு முக்கிய காரணமாகும்."

சென்னை மாநில பாங்கி ஊழியர் சங்கம்

சென்னை, டிச. 9—

சென்னை மாநில பாங்கி ஊழி யர் சங்கத்துடன் இணைந்துள்ள பகுதிகளிலிருந்து 150 பிரதிநிதி கள் கலந்துகொண்டு, கடந்த 7, 8-ந் தேதிகளில் சங்கத்தின் திட்டங்களை ஆராய்ந்தனர்.

1957—58-ம் ஆண்டிற்கான சங்க நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப் பட்டனர்:—தலைவர்: ஆர். வி. கிருட்டினமூர்த்தி; செயலாளர்: பி. கே. சனர்த்தனம் பிள்ளை; பொருளாளர்: ஆர். சதாசிவம்; மற்றும் 30 உறுப்பினர்கள் கொண்ட நிர்வாகக் குழுவும் அமைக்கப்பட்டது.

அறுவடையாகும் புதிய தானியங்கள்

நியாய விலை நிர்ணயிப்பதில் காலதாமதமேன்?

புதுடில்லி, டிச. 12—

புதிதாக அறுவடையாகி விற் பனைக்கு வரவிருக்கும் உணவு தானியங்களுக்கு நியாயமான விலையை சர்க்கார் நிர்ணயம் செய்யுமாம்!

விலை நிர்ணயக் கொள்கை பற்றி விரைவிலேயே அறிவிக்கப் படுமென்றும், உணவு தானிய விசாரணைக் குழுவின் சிபாரிசுகள் மீது சர்க்கார் செய்யும் முடிவைப் பொறுத்தே இதுபற்றி முடிவு செய்ய வேண்டியிருப்பதால், கால தாமதம் ஏற்படுவது இயற்கை தான் என்றும் துணை உணவு அமைச்சர் ஏ. எம். தாமஸ், மக் கள்சபையில் கூறியுள்ளார்.

அஞ்சல் பிரிப்பக ஊழியர்கள்

சுகாதார நாள்

குறைகளைக் களைய யோசனை

அகில இந்திய ஆர். எம். எஸ். மூன்றும், நான்காம் வகுப்பு ஊழியர் சங்களின்—சென்னை பிரிப்பகக் கிளைகளின் சார்பில் சென்னை பார்க் டவுன் பிரிப்பக அலுவலகத்தின் சுகாதார நாள் சென்னை மேயர் திருமதி தாரா செரியன் தலைமையில் 8-12-57ல் நடைபெற்றது. விழாவிற்கு வந்திருந்தோரை வரவேற்று திரு. சக்கரவர்த்தி பேசினர்; தொழிற் சங்கம் சுகாதார நாள் அனுமதிக்க வேண்டிய நிலைமையேற்பட்டதை விவரித்து, பிரிப்பக அலுவலகத் தில் காணக்கூடிய சுகாதாரக் குறைகளை அவர் சுட்டிக் காட்டி ஞர், பெரும்பாலோர் இருமல், க்ஷயரோக நோய்க்கு ஆளாயிருப் ருப்பதையும், தூசுகள் நிறைந்த பைகளைப் பற்றியும் சொன்ஞர்

மேயர் தன் தலைமையுரையில் பாராட்டுதலுக்கு நன்றி தெரி வித்துக்கொண்டு பைகளைச் சுத்தம் செய்வதற்கு வேண்டிய கருவிகள் அமைப்பதிலும், நவீன வசதிகளுடன் கக்கூஸ் அமைத் துத் தருவதிலும், தூசுகளை நீக்கு வதற்குப் போதிய ஆட்களை நிய மிப்பதிலும் அதிகாரிகள் கவனம் செலுத்துவார்கள் என நம்புவ தாகவும், இக்குறைபாடுகளை நீக்கு வதற்கு கூடிப்பேசி வழிவகை களைக் கூறுதல் வேண்டுமென்றும் சொன்ஞர்.

சென்னை நகர சுகாதார அதி காரி டாக்டர் சுந்தரபாபு பேசுகை யில், தூசுகளை அகற்றுவ தற்கும், தூசுகள் உறிஞ்சப்படுவ தற்கும் கருவிகள் எளிதாக அமைக்கலாமென்றும், தூசுகளை வெளியே அகற்ற கட்டடத்தில் விசிறிகளை அமைக்கலாம் என் றும் யோசனைகள் கூறினர்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

திராவிட முன்னேற்றக் கழகப்

பொதுக்குழுக் கூட்டம்

★

29—12—57 ஞாயிறு அன்று நாகர் கோயிலில் திராவிட முன்னேற்றக் கழகப் பொதுக்குழுக் கூட்டம் நடைபெறும்.

'அறிவகம்' சென்னை
2—12—57

தலைமைக் கழகம் (தி. மு. க.)

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

அண்ணா முழக்கம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இருந்ததுதான் முக்கியம் என்முகி விடுகிறது. மேசைமீது சோடா புட்டி இருந்ததும் உண்மைதான்; நான் பேசியதும் உண்மைதான். ஆனல், எதற்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டும்?

"அதைப்போலத்தான், பண்டிதர், சாதியை ஒழிக்க என்ன சொல்லியிருக்கிருர் என்பதைப் பார்க்கவேண்டும். பெரியாரைப் பற்றி என்ன சொன்னுர் என்பதை மட்டும் எடுத்துக்காட்டுபவர்களுக்கு என் வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

"நேரு பண்டிதர், சென்னையிலும், திண்டுக்கல்லிலும், திருச்சியிலும் பேசிய பேச்சுக்கள் கோர்ட்டை அவமதிக்கும்வகையிலே அமைந்திருக்கின்றன பெரியார் மீது கோர்ட்டிலே வழக்கு இருந்துவருகிறது. 12-ந் தேதி இந்த வழக்கு பற்றித் தீர்மானிக்கப்படவிருக்கிறது. முக்கிய தலைவர்—நாட்டின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருப்பவர் இந்தக் குற்றத்தைச் செய்திருக்கிருர். வழக்குமன்றத்திலிருக்கிற பிரச்சினையைப் பற்றி இவர் எப்படிப் பேசலாம்? எதற்கு வழக்கு—விவகாரம் என்றெல்லாம் வைப்பது?

"'கிழவரை நீண்ட காலத்துக்குச் சிறையில் வையுங்கள்; அல்லது பைத்தியக்கார விடுதியில் தள்ளுங்கள்; வெளியே விடாதீர்கள்' என்று சொன்னல், வழக்கை விசாரிக்கின்றவர்கள் மனதில்என்ன படும்? வழக்கு விசாரணையிலிருக்கும்போது அதுபற்றிப் பேசுவது சட்டத்துக்கு ஒழுங்கல்ல!

"நேரு பண்டிதரின்மீது 'சட்ட விரோத'க் குற்றஞ் சாட்ட விரும்புகிறேன். நான் சொன்னல் அதை அவர் பொருட்படுத்த மாட்டார் என்பதையும் நான் அறிவேன்; ஒரு பெரிய தலைவர், இப்படி மட்டரகமான செயலில் இறங்கிவிட்டார் என்பதை எடுத்துக்காட்டத்தான் இதை நான் கூறுகிறேன்.

"மூட்டை முடிச்சுகளைக் கட்டிக்கொண்டு நாட்டை விட்டுப் போகச்சொன்னரே, பண்டிதர், எங்கே போவது? எங்கு இடம் வைத்திருக்கிறீர்கள்? உலகத்தில் வேறு எந்த நாட்டில் இடம் கொடுப்பார்கள்? ஜப்பானுக்குப் போக முடியுமா, அல்லது அதற்கு அப்பாலுள்ள தீவுகளுக்குப் போக முடியுமா? போனல் 'நீ யார் ஐயா' என்றுகேட்பானே! அல்லது, இலங்கையில்தான் இடம் கிடைக்குமா?

"எங்கே போவது? எங்கேயாவது போகிறேம் என்று வைத்துக்கொள்ளுங்கள், நாங்கள் மூட்டை முடிச்சுகளைக் கட்டிக்கொண்டு போய்விட்டால், பிறகு இங்கு வேறு என்ன இருக்கும் என்று கருதுகிறீர்கள்?

'அகநானூறும் — புறநானூறும், திருக்குறளும், சீவகசிந்தாமணியும், சிலப்பதிகாரமும், மணிமேகலையும் எங்களோடு வந்துவிட்டால் மிச்சம் இங்கு என்ன இருக்கும்? தமிழ்வீரம்—தமிழ்ப் பண்பு—வரலாறு — தமிழ்மொழி இவையத்தனையும் சேர்ந்தால் தானே சிறப்பு இருக்கும்? இவையெல்லாம் எங்கள்கூடவே வந்துவிடுமே!

"எங்களை வெளிநாட்டுக்கு அனுப்பிவிட்டால் பிறகு இங்குள்ள நிலை என்ன? மரத்துக்கு மரம் குரங்கு தாவும்!"

(தொடரும்)

கழகக் கூட்டங்கள்

★

சங்கராபுரம்

15—12—57 மாலை 5 மணிக்கு

தலைவர்: சி. நடராசன் எம்.எல்.ஏ.

பேசுவோர்: அண்ணா, எம். ஆனந்தன் எம்.எல்.ஏ.

★

சேலம்

அரிசிபாளையத்தில்

15—12—57 மாலை 6 மணிக்கு

தலைவர்: ஏ. சித்தையன்

பேசுவோர்: அண்ணா, ஏ.வி.பி.ஆசைத்தம்பி எம்.எல்.ஏ.

★

சேலம்

அம்பிகா டாக்கீஸ் அருகில்

15—12—57 இரவு 8-மணிக்கு

தலைவர்: ஜி. கே. முனுப்

பேசுவோர்: அண்ணா, ஏ.வி.பி.ஆசைத்தம்பி எம்.எல்.ஏ.

★

வேலூர் (வ.ஆ.) 9-வதுவட்டம்

(இராசமாணிக்கன் பாளையம்)

பிள்ளையார் கோவில் வீதியில்

15—12—57 மாலை 6 மணிக்கு

தலைவர்: எம். பி. சாரதி எம்.எல்.ஏ.

பேசுவோர்:
கே. ஏ. மதியழகன்
ஆர். எஸ். பாண்டியன்
அ. கருத்தோவியன்
தேசியமணி

★

அருப்புக்கோட்டை

தியாகராயர் வாலிபர் சங்க முன்

15—12—57 அன்று

தலைவர்: சிவ. சண்முகசுந்தரம்

பேசுவோர்:
மதுரை எஸ். முத்து
எம். எஸ். இராமசாமி

★

15—12—57 மாலை 6 மணிக்கு

தலைவர்: ப. நாராயணசாமி

பேசுவோர்:
போன். தருமன
ந. சாமிநாதன்
பி. கே. ஈ. அப்துல்லா

★

சோழபுரம்

கடைத் தெருவில்

15—12—57 மாலை 5 மணிக்கு

தலைவர்: எஸ். ஏ. துரை

பேசுவோர்:
போன். சோக்கலிங்கம்
என். அசோகன்
கு. இராசமாணிக்கம்
பி. ஏ. லிங்கன்
எம். வைத்தியநாதன்
எஸ். ஏ. முகம்மதுகனி
எஸ். வி. பாலு

★

லால்குடி

சிவன்கோவில் முன்பு

14—12—57 மாலை 5 மணிக்கு

தலைவர்: அன்பில்-இராமையா

பேசுவோர்:
சி. பி. சிற்றரசு
அன்பில்-தருமலிங்கம்
எஸ். நெடுமாறன்

★

சி. கொற்றவன்குடி:

15-12-57 மாலை 5-30 மணிக்கு

தலைவர்: கூ. ஆறுமுகம்

பேசுவோர்:
கே.ஆர்.பி. மணிமொழியன்
இரே. பாலகுருசாமி
அறிவுடைநம்பி
கே. சிவப்பிரகாசம்
செல்வி இளங்கோ

(மாலை 4-30 மணிக்கு ஊர்வலம் உண்டு)

★

சி. என். பாளையம்

15—12—57 மாலை 6 மணிக்கு

தலைவர்: வை. சிவப்பிரகாசம்

பேசுவோர்:
டி. கே. சீனிவாசன்
சே. மூசா

நாஞ்சில்மாவட்ட தி.மு.க. இரண்டாவது மாநாடு

மகத்தான ஏற்பாடுகள்

நாஞ்சில் மாவட்ட தி மு. கழக இரண்டாவது மாநாடு டிசம்பர் 27, 28-ந் தேதிகளில் நாகர் கோவிலையடுத்த, கிருட்டினன் கோவிலில் நடைபெறவிருக்கிறது.

20 000-க்கு மேற்பட்ட மக்கள் அமைதியாக உட்கார்ந்து கேட்கும் முறையில் பிரும்மாண்டமான பந்தல் தயாராகிக் கொண்டிருக்கிறது

பந்தல் முகப்பை, சிரிப்பாலே. சிந்தையைக் கிளறிய கலைவாணர் என் எஸ். கே. அவர்களின் திரு உருவம் அலங்கரிக்கிறது.

மாநாட்டின் அரங்கில், மறைந்த மாவீரன் கே வி கே. சாமி கம்பீரமாக வீற்றிருப்பார்; அவர் உருவத்தை, தூத்துக்குடி தோழர் ஜோசப் அவர்கள், 'கட்அவுட்'டில் தயாரிக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிருர்.

நகரமெங்கும் வளைவுகளும், தோரணங்களும், கழகக் கொடிகளும நிறைந்து கண்கொள்ளாக் காட்சியாக அமையப் போகிறது.

மாநாட்டின் தலைவர் பொறுப்பை, பாராளுமன்ற உறுப்பினர் தோழர் ஈ. வி. கே. சம்பத் அவர்கள் ஏற்றுக் கொண்டுள்ளார்.

மதுரை-டாக்டர் அருணசலம் அவர்கள், மாநாட்டைத் துவக்கி வைப்பார்.

மாநாட்டில் அண்ணா, பொதுச் செயலாளர் நெடுஞ்செழியன், என். வி. நடராசன், மு. கருணநிதி, கண்ணதாசன், ப. உ சண்முகம், இரா. இளம்வழுதி, சத்தியவாணிமுத்து, காஞ்சி-கல்யாணசுந்தரம், வி பி இராமன், இரா. செழியன், சி. பி. சிற்றரசு, தாமரைச்செல்வி, ஏ. கோவிந்தசாமி, ஆகியோர், தனித்தனித் தலைப்புகளின்கீழ் விரிவுரையாற்றுவர்.

கலைஞர்கள் எம். ஜி. இராமச்சந்திரன், எஸ் எஸ் இராஜேந்திரன் டி. வி. நாராயணசாமி, என் எஸ். நாராயணன் ஆகியோர் பேச்சு விருந்தளிப்பர்.

கழகத்தின் முன்னணி வீரர்கள் அனைவரும் மாநாட்டில் பங்கு கொள்கின்ருர்கள்.

மாநாட்டை, தோழர் நாகூர் அனிபாவின் இன்னிசை ஆரம்பித்து வைக்கும்.

முதல்நாள் மாநாட்டை எம். கே. கோவிந்தராச பாகவதர் (எம்.கே. தியாகராச பாகவதரின் இளவல்) குழுவினரின் தீந்தமிழ்க் கழகப் பாடல்கள் இன்ப வெள்ளத்தில் ஆழ்த்தப்போகின்றன.

மாநாட்டின் இரண்டாம் நாள், இதயத்தைத்தொட்டு, உணர்ச்சிக் கொடுமுடிக்கு நம்மை அழைத்துச் செல்லும் 'மனித இதயம்' நாடகம் நடைபெறும்; இதுவரை கழகத் தோழர்கள் கண்டு களித்திராத முற்றிலும் புதிய நாடகம்!

மாநாட்டிற்குப் பல்லாயிரக் கணக்கில் வருகை தரும் தோழர்களுக்கு முடிந்த மட்டும் வசதிகள் செய்து தரப்படும் என்ற உறுதி உண்டு; திருநெல்வேலியிலிருந்து நாகர் கோவில் வந்து சேர பஸ் வசதிகளுக்கும் ஏற்பாடு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

மாநாட்டில், தண்ணீர் வசதிக்காகக் குழாய்கள் பொருத்தப்படும்.

தாய்மார்களுக்குத் தனி வசதிகள் தயாராகின்றன.

29—12—57-ல், நாகர் கோவிலை ஒட்டிய கோட்டாறு பகுதியில் நமது பொதுக்குழு உறுப்பினர் ஏ. குமாரவேல் அவர்களின் 'குமார் ரைஸ் மில்லில்' பொதுக் குழுக் கூட்டத்திற்கு முறையான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன

நாஞ்சில் மாவட்டத்தில் நடைபெறும் இம்மாநாடு முற்றிலும் ஒரு திருப்புமையமாக அமையப் போகிறது; கரங்கூப்பி, ஒளிமுகங் காட்டி, உங்களை அதோ, நீலத் திரைக் கடலோரம், கன்னியாகுமரி அழைக்கிறது!

இயற்கை சிரித்துக் களிநடம் புரியும்-பூத்துக் குலுங்கும் வெளிகள் நிரம்பிய நாஞ்சில், உங்களையெல்லாம் எதிர்பார்த்து நிற்கிறது!

மாவட்டத்தின் வரலாற்றில் ஒளிமிக்க அத்தியாயம் புதிதாகச் சேர விருக்கிறது!

எப்போதாவது ஒருமுறைதான் இந்த வாய்ப்பு—இதனை நழுவ விடாதீர்! பின்பு வருந்தாதீர்—வாய்ப்பு இழந்துவிட்டோமே யென்று!

டிசம்பர் 27, 28, 29-ந் தேதிகள் இதய ஏட்டிலே குறித்துக் கொள்ளுங்கள்! உங்களது நினைவில்—எண்ணத்தில், அந்தந்தத் தேதிகள் களிநடம் புரியட்டும்!

—வரவேற்புக் குழுவினர்

அறிவிப்பு

"பிப்ரவரி திங்கள் முடிய கூட்டங்களுக்கான தேதி கொடுத்துவிட்டபடியால், நண்பர்கள் யாவரும் (சென்னைத் தோழர்கள் உட்பட) இந்த இரண்டு திங்களில் கூட்டம் நடத்த தேதி வேண்டுமென்று கேட்கா திருக்குமாறு மிகப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறன்" எனத் தோழர் சி. பி. சிற்றரசு வேண்டிக்கொள்கிருர்.

ஏ. கே. வில்வம், அருண்மொழி

நிகழ்ச்சிகள்

டிச. 15: திண்டுக்கல்
16: தேவாரம் (மதுரை)
18, 19, 20: கோபி கோவை வட்டம்
21: வேப்பங்கச்சேரி (வ.ஆ.)
22: இலாசுபபேட்டை—புதுவை

பொன்-தருமன்

நிகழ்ச்சிகள்

டிச.
14: கிழக்குடிக்காடு (திருச்சி)
15: வலங்கைமான்
16: வேப்பத்தூர்
17: குரிச்சி
18: கருப்பூர்

சென்னை—37வது வட்ட தி. மு. க. கிளை-துணை அமைப்புத் தோழர்களுக்கு:

14—12—57 இரவு $8\frac{1}{2}$ மணிக்கு தி. மு. க. பணிமனையில் (23 கடைத் தெருச்சாலை, இராயப்பேட்டை) தோழர் கோ. இளவரசு தலைமையில் மேற்படி வட்டக் கிளை, மற்றும் வட்டத்திலுள்ள துணை அமைப்புகளின் கூட்டுக் கூட்டம் நடைபெறும்; அதுபோது, சில முக்கிய பிரச்சினைகள் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

சொற்பயிற்சிக் கூட்டம்

14—12—57 மாலை 6-மணியளவில், சென்னை 8-வது வட்டம் திருவள்ளுவர் முத்தமிழ்க் கழகப் பணிமனையில் (10, லாயர் சின்னதம்பி முதலி தெரு) தோழர் ம. ரா. இரத்தினம் தலைமையில், 'நாடும் ஏடும்' என்ற பொருள்குறித்துப் பலர் பேசுவர்.

மாயூரம் நகர தி. மு. க. செயறகுழு உறுப்பினர்களுக்கு:

15—12—57 இரவு 9 மணிககு சின்னக்கடை வீதி, 'நடராசன் நினைவு வாசகசாலை'யில் செயற்குழுக் கூட்டம் நடைபெறும். அதுபோது பல முக்கியப் பிரச்சினைகள் ஆய்வுக்குவரும்.

நாகை வட்ட தி. மு. க. கிளைச் செயலாளர்களுக்கு:

"15—12—57 மாலை 3 மணியளவில் நாகப்பட்டினம் தி.மு. கழக அலுவலகத்தில், நாகப்பட்டினம் வட்ட தி. மு. கழகச் செயலாளர் தேர்தல் நடைபெறும்; அவ்வமயம் கிளைக் கழகச் செயலாளர்கள் அனைவரும் வந்திருந்து சிறப்பித்துத் தரும்படி கேட்டுக்கொள்கிறேன்"

என, தஞ்சை மாவட்டச் செயலாளர் தோழர் என். எஸ். இளங்கோ அறிவிக்கிருர்.

நாகூர் தி. மு. கழகப் பொது உறுப்பினர்களுக்கு:

"15—12—57 காலை 11 மணியளவில் நாகூர் பப்ளிக் ரோடு, எம். எச். மாலிம் அவர்கள் இல்லத்தில் தி மு. க. பொது உறுப்பினர்கள் கூட்டம் நடைபெறும்; சில முக்கிய பிரச்சினைகள் ஆய்வுக்கு வருவதால் அனைவரும் வருகை தரவேண்டுகிறேன்"

என, தஞ்சை மாவட்டச் செயலாளர் தோழர் என். எஸ். இளங்கோ தெரிவிக்கிருர்.

திண்டுக்கல் கே. வி. கே. சாமி நினைவுப் படிப்பக ஆண்டு விழா

15—12—57 மாலை 6 மணிக்கு திண்டுக்கல் சோலைஹால் திடலில் தோழர் பி. இராஜா அவர்கள் தலைமையில் கே. வி. கே. சாமி படிப்பகத்தின் முதலாவது ஆண்டு விழா நடைபெறும். தோழர்கள் சி. பி. சிற்றரசு, பி. சமதர்மம் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர். தோழர் என். முத்து கொடியேற்றி வைப்பார்.

வ. ஆ மாவட்ட குடியரசுக் கட்சி துவக்க விழா

15-12-57 பிற்பகல் 1-மணிக்கு வேலூர் (வ. ஆ) நகர மண்டபத்தில், மேற்படி மாவட்ட தாழ்த்தப்பட்டோர் சம்மேளனத்தின் பேரவைக் கூட்டம் நடைபெறும். அதுசமயம், மேற்படி சம்மேளனம் கலைக்கப்பட்டு, 'வ. ஆ. மாவட்ட குடியரசுக் கட்சி' துவக்கப்படும். பல முக்கியஸ்தர்கள் கலந்துகொள்வர்.

நூற்பதிப்பக ஊழியர் சங்கம்

பாடப்புத்தகங்களை அரசாங்கம் வெளியிட முடிவு செய்திருப்பதின் விளைவாக புத்தகம் வெளியிடும் (நூற்பதிப்பக) நிலைய, ஊழியர் வாழ்க்கைப் பிரச்சினை குறித்து முடிவு செய்யும் பொருட்டு 14—12—57 மாலை 4 மணிக்கு 13, கொண்டி செட்டித் தெரு, சென்னை-1-ல், மேற்படி ஊழியர்களின் கூட்டம் ஒன்று நடைபெறும் என்று அறிவிக்கப்படுகிறது.

சென்னை—தூளை நகர இளைஞர் கழகம்

14—12—57 மாலை 6 மணிக்கு 10, மாணிக்கச் செட்டித் தெரு, கழக மனையில், சென்னை பர்மா ஷெல் கம்பெனியாரால் ஓர் படக்காட்சி நடைபெறும்.

மறைவு

சென்னை, டிச. 12—

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தராக நற்பணியாற்றிய பேராசிரியர் எம். இரத்தினசாமி அவர்களின் வாழ்க்கைத் துணைவியார், கடந்த 8-ந் தேதியன்று தமது 61-வது வயதில் இயற்கையெய்தியதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.